**செய்தி வெளியீடு எண்:315** **நாள் :29.06.2015**

**பத்திரிக்கைச் செய்தி:**

2015 – 2016 ஆம் கல்வியாண்டிற்குரிய பி.எஸ்.எம்.எஸ் / பி.ஏ.எம்.எஸ் / பி.யு.எம்.எஸ் / பி.என்.ஒய்.எஸ் / பி.எச்.எம்.எஸ் 5 1/2 ஆண்டு மருத்துவ பட்டபடிப்பிற்குரிய சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 29/06/2015 முதல் 24/07/2015 வரை கீழ்க்கண்ட அரசு இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளில் விநியோகிக்கப்படும்.

1. அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை திருநெல்வேலி மாவட்டம்.

2 அரசு ஒமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், மதுரை மாவட்டம்.

3 அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி, கோட்டாறு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

4 அரசு சித்த மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், சென்னை 106.

5 அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், சென்னை 106.

6 அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், சென்னை 106.

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 31/07/2015 பிற்பகல் 5.00 மணி வரை பெறப்படும்.**

விண்ணப்பம் வேண்டுபவர்கள் இயக்குநர் இந்திய மருத்துவம் மற்றும் ஒமியோபதி, சென்னை–600 106 என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில், ஏதேனும் ஒரு நாட்டுடமையாக்கப்பட்ட வங்கியிலிருந்து ரூ 500/–க்கான கேட்பு வரைவோலையை 29.06.2015 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ எடுத்து விண்ணப்பப்படிவ கட்டணத்திற்காக வேண்டி சமா்ப்பிக்க வேண்டும். மேலும், தாழ்த்தப்பட்டடோர், தாழ்த்தப்பட்ட அருந்ததியினர் மற்றும் பழங்குடியினர் விண்ணப்பதாரர்கள், சாதி சான்றிதழ் மற்றும் +2 மதிப்பெண் சான்றிதழ்களின் சுயசான்றொப்பமிட்ட நகல்களை விண்ணப்பப்படிவம் வேண்டி வேண்டுதல் கடிதத்துடன் சமா்ப்பித்தால் விண்ணப்பக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. விண்ணப்பங்களை www.tnhealth.org. என்ற வலைதளத்திலிருந்து 29.06.2015 அன்று முதல் பதிவிறக்கம் செய்து மேற்கூரியவாறு கேட்வரைவோலையை இணைத்து விண்ணப்பிக்கலாம்.

செயலாளர்
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**